FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8319414

1. District : சிவகங்கை மாவட்டம் PS: உலகம் தெற்கு காவல்நிலையம் மற்றும் கண்காணிப்பு பிரிவு Year: 2025 ஆண்டு FIR No.: 5/2025 முத.அ. எண் Date: 13.05.2025 நாள்

2. (i) Act சட்டம்: Prevention of corruption Sections பிரிவுகள்: 7(a)
(ii) Act சட்டம்: Act 1988, as amended by Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: P.C. (Amendment) Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 29.04.2025 Date to : நாள் வரை 12.05.2025
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் 18.00 hrs Time to : நேரம் வரை 13.15 hrs.
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 13.05.2025 Time : நேரம் 07.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume-II Time : நேரம் 07.20 hrs

4. Type of Information : Written/ Oral / Electronic form : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம் எழுத்து மூலம்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் காரைக்குடி மாநகராட்சி அலுவலகம், சிவகங்கை மாவட்டம்
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சுமார் 60 கி.மீ வடகிழக்கு

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் A. பாலமுருகன் (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் ஆறுமுகம்
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது 43/1982 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் நகை பட்டறை (g) Address : முகவரி கு.எண். 38/1, திருநாவுக்கரசர் தெரு, கருணைவாசல், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திரு. பிரேம்குமார், வருவாய் ஆய்வாளர் (R.I), காரைக்குடி மாநகராட்சி அலுவலகம், சிவகங்கை மாவட்டம்,

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
— தாமதம் இல்லை —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12 FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 13.05.2025 தேதி காலை 07.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது சிவகங்கை மாவட்டம், காரைக்குடி, கழனிவாசல், திருஞானசம்மந்தர் தெரு, க.எண்.38/1 என்ற முகவரியில் வசிக்கும் ஆறுமுகம் என்பவரின் மகன் திரு.A.பாலமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று இரகசிய விசாரணை செய்தும், புகார்தாரர், குற்றம் சுமத்தப்பட்ட சிவகங்கை மாவட்டம், காரைக்குடி மாநகராட்சி அலுவலக வருவாய் ஆய்வாளர் திரு.பிரேம்குமார் ஆகியோரைப் பற்றி ரகசிய விசாரணை மேற்கொண்டு அவர்களின் நடத்தைகளை அறிந்தும் புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13 Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

A.பாலமுருகன்

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer-in-Charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

13/05/25

Name: பெயர் (A. ஜான் பாட்சா)
Rank: நிலை .....No. எண் .....

காவல் துணைக்கண்காணிப்பாளர்
உளவுத் தடுப்பு மற்றும் கண்காணிப்பும் பிரிவு
சிவகங்கை.

15 Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

13.05.2025 at 08.00 hrs.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.05/2025 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

அன்னாரின் அனுமதி பெற்று, 13.05.2025-ம் தேதி, சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.05/2025 u/s.7(a) of Prevention of Corruption Act 1988, as amended by the P.C. (Amendment) Act 2018 என வழக்கு பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர்:A.பாலமுருகன், த/பெ.ஆறுமுகம், க.எண்.38/1, திருஞானசம்மந்தர் தெரு, கழனிவாசல், காரைக்குடி, சிவகங்கை மாவட்டம், பெறுநர் காவல் துணைக்கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை, ஐயா, நான் மேற்கண்ட முகவரியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் கடந்த 20 ஆண்டுகளாக நகை பட்டரை தொழில் செய்து வருகிறேன். நான், கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்னர் காரைக்குடி, கழனிவாசல், சின்னபிள்ளையார்கோவில் தெரு, வடக்கு வீதியில் T.S.No.804-ல் அமைந்துள்ள 1170.06 சதுரடி மனையிடத்தினை எனது மனைவி திருமதி.மணிமேகலை பெயரில் கிரையம் வாங்கினேன். மேற்படி மனையிடத்தில் 682.43 ச.அடி பரப்பளவில் கான்கிரீட் வீடு கட்டுவதற்கு காரைக்குடி மாநகராட்சியில் 21.08.2024ம் தேதி கட்டிட அனுமதி உத்தரவு பெற்று, வீடு கட்டி முடித்துள்ளேன். எனது வீட்டிற்கான மின் இணைப்பு வகையினை கட்டுமான பயன்பாட்டிற்கான இணைப்பிலிருந்து வீட்டிற்கான மின் இணைப்பாக மாற்றுவதற்கு வீட்டு வரி இரசீது தேவைப்பட்டது. எனவே, நான் புதியதாக கட்டிய வீட்டிற்கு வரி விதிப்பு செய்து, அதற்கான ரசீது வழங்கக்கோரி கடந்த 22.04.2025ம் தேதி காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் எனது மனைவி பெயரில் மனு செய்தேன். 29.04.2025ம் தேதி மாலை சுமார் 6 மணியளவில் காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்தில் R.I. ஆக பணிபுரிந்து வரும் திரு.பிரேம்குமார் என்பவர் மற்றொரு நபருடன் நான் புதியதாக கட்டியுள்ள வீட்டிற்கு வந்து வீட்டினை பார்வையிட்டார். பின்னர் R.I. பிரேம்குமார் என்னிடம், வீட்டு வரி இரசீது வழங்க ரூ.70,000/- ஆகும், பணத்தை கொடுத்தவுடன் இரசீது போட்டுவிடலாம் என தெரிவித்தார். அதற்கு நான் அவரிடம், சார் வீடு கட்ட ஸ்ரீராம் பைனான்ஸ் நிறுவனத்தில் லோன் போட்டுத்தான் வீடு கட்டியிருக்கிறேன், என்னிடம் அவ்வளவு பணம் இல்லை குறைத்துக்கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர், சரி ரூ.50,000/- கொடுத்திடுங்க, பணம் கொடுத்தால்தான் இரசீது போட முடியும் என்று தெரிவித்துவிட்டு சென்றுவிட்டார். மறுநாள் 30.04.2025ம் தேதி மதியம் சுமார் 12.18 மணிக்கு, மேற்படி R.I. பிரேம்குமார் அவரது செல் நம்பர் 9003613939-லிருந்து எனது செல் நம்பர் 9080969822-க்கு தொடர்புகொண்டு, "வீட்டு வரி இரசீதிற்கு நான் கேட்ட பணத்தை ரெடி பண்ணீட்டிங்களா" என்று கேட்டார். அதற்கு நான் அவரிடம், "சார் பணம் புரட்ட

முடியவில்லை, ரொம்ப கஷ்டத்தில் இருக்கிறேன்" என்று கூறினேன். அதற்கு அவர் "பணத்தை ஒரு வாரத்தில் ரெடி பண்ணி கொடுங்க, இரசீது போட்டுவிடலாம்" என சொன்னார். அதன்பின்னர், நான் நேற்று 12.05.2025ம் தேதி மதியம் சுமார் 1.15 மணியளவில் காரைக்குடி மாநகராட்சி அலுவலகத்திற்கு சென்று, R.I. திரு.பிரேம்குமார் அவர்களை சந்தித்து, வீட்டுக்கு எப்போது வரி போட்டு தருவீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், "நான்தான் அன்றைக்கே சொல்லிட்டேன்ல, பணம் ரூ.50,000/- கொடுத்த பின்னர்தான் இரசீது போட முடியும்னு" என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் சார் பத்தாயிரம் மட்டும் வாங்கிக்கொண்டு ரசீது போட்டு கொடுங்கள் என்று கூறினேன். அதற்கு அவர் "ஏற்கனவே, உங்களுக்கு குறைத்துவிட்டேன், இனிமேல் ஒரு ரூபாய் கூட குறைக்க முடியாது, பணம் ரூ.50,000/-த்தை ரெடி பண்ணிட்டு, என்னிடம் கொடுங்கள், நீங்க பணத்தை கொடுத்ததிலிருந்து 10 நாட்களுக்குள் இரசீது போட்டுத்தருகிறேன்" என்று கறாராக தெரிவித்துவிட்டார். எனக்கு லஞ்சம் கொடுத்து வீட்டுவரி இரசீது வாங்க விருப்பம் இல்லை. ஆகவே, என்னிடம் லஞ்சம் கேட்ட காரைக்குடி மாநகராட்சியில் பணிபுரிந்து வரும் R.I. திரு.பிரேம்குமார் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, sd/xxxxx (A.பாலமுருகன்).

Sir, Received the complaint on 13.05.2025 at 07.00 hrs, genuineness of the complainant was verified through sources and found to be genuine. The Integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. Found prima facie for the allegation of the complainant. Since, the registration of Regular Case is warranted, the matter is intimated & obtained permission from the SP/SR, V&AC, Chennai, and registered a case in Sivagangai V&AC Crime.No.05/2025 u/s 7(a) of Prevention of Corruption Act, 1988, as amended by the P.C.(Amendment) Act 2018 on 13.05.2025 at 07.20 hrs and took up for investigation. sd/xxxx (A.John Britto, Dy. Superintendent of Police, V&AC, Sivagangai).

இந்த வழக்கின் FIR மற்றும் அசல் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகளுக்கான சிறப்பு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், மற்ற நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன். 13/5/25

DEPUTY SUPERINTENDENT OF POLICE,
VIGILANCE AND ANTI-CORRUPTION,
SIVAGANGAI.